இப்போது பெற்ற அனுபவத்தைக் கொண்டு, எவ்வகையானும் எவ்விதத் தாமதமுமின்றி அடுத்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்களை இக்கழகம் தயாரிப்பதில் இடர்ப்பாடு எதுவும் இருக்காது.

இந்த அரசுப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காகத் தனியார் அச்சகங்களை அரசு நம்பியிருக்காத வகையில் கிழக்கு ஜெர்மனியிலிருந்து அவசியமான அச்சு இயந்திரங்கள் தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முழு வசதி பெற்ற அச்சு இயந்திரம் நிறுவப் பட்டதும், இத்தகைய பாடப் புத்தகங்கள அச்சிடுவதில் ஏற்படும் பெரும்பாலான இடர்ப்பாடுகள் தவிர்க்கப்படும்.

V. GOVERNMENT BILL

The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970. (L. A. Bill No. 18 of 1970)

மாண்புமிகு திரு. கே.வி. சுப்பையா: தலைவர் அவர்களே, சட்ட மன்றப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா(*) (சட்ட மன்றப் பேரவை மசோதா 18/1970) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

உறுப்பினர்கள் அறிந்துள்ளவாறு குடியிருப்புக் கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புக்கு ஆகாத கட்டிடங்களின் வாடகையைக் கட்டுப்படுத்தவும் அக்கட்டிடங்களில் வாடகைக்குக் குடியிருப்பவர்களைக் காரணமின்றி வெளியேற்றுவதைத் தடுப்பதுமே தமிழ் நாடு 1960-ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு சட்டம் 18/1970) சட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இது காரியத்திற்கான சட்டம் இம்மாநிலத்தில் 1941-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயலில் உள்ளது. 1960-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் முன்பு செயலிலிருந்த சட்டம் திருத்தியமைக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டது. 1960-ஆம் ஆண்டுச் சட்டம் 30-7-1970 அன்று செயல்திறனற்றுப் போகும். சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை ஆய்வு செய்து, தகுந்த திருத்தங்களைத் தெரிவிக்கும்படி, உள்துறை அரசுச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு அதிகாரிகள் பலர் அடங்கிய குழு ஒன்றை அரசு 1969 நவம்பரில் அமைத்துள்ளது. இக்குழு பெரும்பாலும் தனது பணியை முடித்துவிட்டது. தனது அறிக்கையை 15-9-70-க்குள் அரசுக்குப் பணிந்து அனுப்புமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

குழு தனது அறிக்கையை அனுப்பிய பிறகு, அரசு அவ்வறிக்கையைப் பரிசீலனை செய்து தகுந்த சட்டம் ஒன்றை இயற்ற முன்வரும். இயன்ற விரைவில் இது மேற்கொள்ளப்படும். 1960-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவுக்கு 30-9-70-க்கு முன்பு ஒரு திருத்தம் கொண்டுவந்து, அச்சட்டத்தின் செல்திறன் கால அளவை நீட்டித்தாலன்றி, அச்சட்டம் மேற்குறிப்பிட்ட நாளன்று செல்திறனற்றுப்போகும்.

(*) Printed as Appendix III.

குழுவின் அறிக்கை வரப்பெற்று அது அரசினால் பரிசீலனை செய்யப் படும் வரை, சட்டத்தின் செல்திறன் கால அளவைச் சிறிது நீட்டிப்பது அவசியமெனக் கருதப்படுகிறது. சட்டத்தின் செல்திறன் கால அளவை 6 திங்களுக்கு மட்டுமே நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது. எனவே இம்மசோதா ஒரு சாதாரண இடைக்கால நடவடிக்கையே ஆகும்.

இம்மன்றம் இம்மசோதாவை ஏற்குமென நான் நம்புகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970 (L.A. Bill No. 18 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

5-00 p.m. திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இந்த ''ரென்ட் கன்ட்ரோல் ஆக்ட்'' இந்த மாதத்துடன் முடிவடையும் என்று, சட் டத்தைப் புதுப்பித்து வேறொரு புதிய சட்டம் கொண்டுவருவதற்காக அமைச்சர் அவர்களே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக் கிறார்கள். உரிய காலத்தில் செய்து முடிக்க முடியாததனால் மேலும் ஒரு 6 மாதத்திற்கு பழைய சட்டமே நீடித்து இருக்க வேண்டும் என்ற நிலையில் இப்பொழுது தற்காலிக மசோதா ஒன்று வந்திருக்கிறது. இதில் யாருக்கும் ஆட்சேபனை இருப்பதற்கு ஒன்றுமில்லை. ஆகையினால் நானும் இதை வரவேற்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970 (L.A. Bill No. 18 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU K. V. SUBBIAH : Sir, I move—

"That the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970 (L.A. Bill No. 18 of 1970), as passed by the Assembly, be passed."

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970 (L.A. Bill No. 18 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

29th August 1970]

VI. DISCUSSION ON THE ANNUAL FINANCIAL STATEMENT FOR 1970-71 AND THE SUPPLEMENTARY FINANCIAL STATEMENT FOR 1969-70 OF THE TAMIL NADU ELECTRICITY BOARD.

MR. CHAIRMAN : Now the Hon. the Minister for Electricity will reply to the debate on the Tamil Nadu Electricity Board Budget.

மாண்புமிகு திரு. ஓ.பி. ராமன் : மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கைந்து நாட்களாக மின்சார வாரியத்தின் மீது நடந்த விவாதத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இரு தரப்பிலும் தங்களுடைய கட்சிக்கு ஆதரவான கருத்துகளையும், சிலர் நடுநிலைமையோடு பொதுவாக நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கருதிப் பல்வேறு கருத்துகளையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு விவாதத்திற்கு நான் பதிலளிக்கிறபோது எதிர்த் தரப்பிலிருந்து பேசுகின்றவர்கள் முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூன்று ஆண்டுக் காலத்திலே நல்ல சாதனைகளைச் செய்யவில்லை என்று சொன்னதற்காக ஒரு 10 ஆண்டுக்கால புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டினேன். இந்தத் தடவை அதை விடுத்து அகில இந்தியாவிலேயே தமிழகம் எந்த அளவிலே இருக்கிறது என்ற ஒரு கண்ணோட்டத்தை மட்டும் சுருக்கமாக நான் முதலில் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இன்றைக்குக் கிட்டத்தட்ட 11 லட்சம் பம்ப்செட்கள் அகில இந்தியாவிலும், மின்சாரத்தினால் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் நான்கு லட்சத்து எண்பதாயிரம்,— 71,000 என்று போட்டிருக்கிறது— இப்பொழுது இருக்கின்ற கணக்குப்படி 4,80,000 பம்ப்செட்கள் தமிழ் நாட்டிலே மட்டும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றால், இதை முதலிலே யோசித்துப் பார்க்க வேண்டும். அதைவிட இன்னும் தமிழ் நாட்டிலே எத்தனை ஊர்களுக்கு மின்சாரம் போட்டிருக்கின்றோம் ? அகில இந்தியாவிலேயும் எல்லா மாநிலங்களிலேயும் எவ்வளவு தூரம் மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தால்கூட நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்ற கணக்கு தெரிய வரும். ஆகவே கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதாலும், பம்ப்செட்களுக்கு மின்சாரம் கொடுப்பதாலும் அகில இந்தியாவிலேயே யாரும் செய்ய முடியாத அளவுக்குத் தமிழ் நாடு செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நான் இன்னும் சொல்கிறேன், மின்சாரக் கட்டணம் அதிகமாகியிருக்கிறது, குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதில் எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். நமது மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் விவசாயக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று பேசுகிற இந்த நேரத்தில், தொழிலுக்கு இருக்கிற கட்டணத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். எங்களைப் பொறுத்த அளவில் இப்பேர்ப்பட்ட சூழ்நிலை ஏன் வந்தது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இடையிலே தற்காலிகமாக மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி அதன் மூலம் பல கோடி ரூபாய்களைப் பெற்று, அதன் மூலம் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் எங்களுக்குக் கிடையாது. நாம் வெளிநாடுகளிலிருந்து பல பொருட்களை வாங்க வேண்டுமென்றால் ''ஃபாரின்